# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.23/2020 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 01 ( PW– 01 ) |
| பெயர் | :- | சத்யா |
| தேதி | :- | 06–11–2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :–**

நான் ஆராய்ச்சி படிப்பு படிக்கிறேன். நான் என்னுடைய நிரூபண ஆணையுறுதில் சொல்லியுள்ள முகவரில் வசிக்கவில்லை என்றால் அங்குதான் வசித்தேன். தற்போது தற்காலிகமாக வாழப்பாடியில் என் அப்பாவின் அலுவலகத்திற்கு அருகில் வசிக்கிறேன். நான் பொய் சொல்கிறேன் என்றும் என் அப்பா வீட்டில் வசிக்கிறேன் என்றும் சொன்னால் சரிதான். எனக்கு தற்போது 35 வயதாகிறது. என்னுடைய நிரூபண ஆணையுறுதியில் 30 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எனக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். 2021-ஆம் ஆண்டு ஆனது. நான் என் கணவருடன் சென்னையில் பேராசிரியராக வேலை செய்கிறேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்து பூர்வீகச் சொத்து என்றால் இல்லை. தாத்தா சுயமாக சம்பாதித்தது. 1995-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் யார் யார் தரப்பினர் என்றால் என் தாத்தாவும் அப்பாவும். என் பாட்டியும் தரப்பினராக இருந்தார் என்றால் சரிதான். பாகப்பிரிவினை

பத்திரத்தில் பாட்டிக்கு பாகம் ஒதுக்கவில்லை என்றால் அப்பாவும் தாத்தாவும் மட்டும்தான் சொத்தை பிரித்துக்கொண்டார்கள். அந்த பாகப் -பிரிவினை பத்திரத்தில் பொது குடும்பத்திற்கு சம்மந்தப்பட்ட பூர்வீகச் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொள்வதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான்.

என்னுடைய தாத்தாவின் இறுதி காலம்வரை நானும் என் தகப்பனாரும் மட்டும் அவருடன் இருந்தோம் என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. குறிஞ்சி மருத்துவமனையில் வைத்து நான்தான் பார்த்தேன். குறிஞ்சி மருத்துவமனையில் வைத்து பார்த்தேன் என்று காட்ட இந்த வழக்கில் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. ஆனால் ஆவணம் உள்ளது.

என்னுடைய தகப்பனாருக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் நான் 1990 ல் பிறந்தேன். அதற்குமுன் நடந்திருக்கும். என் தகப்பனாருக்கு திருமணம் நடந்தபின் என் தகப்பனாருக்கும் என் தாயாருக்கும் தாத்தா, பாட்டியுடன் கருத்துவேறுபாடு ஏற்பட்டு 30 ஆண்டுகளுக்குமுன் வாழப்பாடிக்கு சென்றுவிட்டனர் என்றால் தற்காலிகமாகதான் சென்றனர்.

1995-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள A அட்டவணை சொத்து தாத்தாவிற்கும் B அட்டவணை சொத்து என் தகப்பனாருக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா அவருடைய மனைவிக்கும் மகள்களுக்கும் வாழ்வாதாரத்திற்கு எவ்வித ஏற்பாடும் செய்யாமல் அவருக்கு ஒதுங்கிய A அட்டவணை சொத்தை பொறுத்து எங்களுக்கு அறுதியாவணம் எழுதி வைக்க வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய தாத்தா வயதானவராகவும் உடல் நலம்

குன்றியும் இருந்த சமயத்தில் நானும் என் தகப்பனாரும் அவரை ஏமாற்றி அழைத்துச் சென்று அறுதியாவணம் எழுதி வாங்கிகொண்டோம் என்றால் சரியல்ல. அதனால் அந்த அறுதியாவணம் செல்லாது என்றால் சரியல்ல.

பாட்டி தற்போது வழக்குச் சொத்தில் உள்ளார் என்றால் சரிதான். முதல் அத்தையுடன் உள்ளார். என் பாட்டியை அத்தையும் அவருடைய மகன் -களும் பராமரித்து வருகின்றனர் என்றால் வழக்குச் சொத்தில் இருந்துவரும் வருவாயை அவர்கள் எடுத்துக்கொண்டு பராமரிக்கிறார்கள்.

அறுதியாவணத்தில் சான்றொப்பம் இட்டது யார் என்றால் கார்த்தி என்பவர். அவர் வாழப்பாடியை சேர்ந்தவர் என்றால் சரிதான். மற்றொரு சான்றாளர் யார் என்று எனக்கு நினைவில்லை.

வழக்குச் சொத்தின் பரப்பளவு எவ்வளவு என்றால் எங்களுக்கு அறுதியாவண கொடையாக கொடுத்தது 02 ஏக்கர். அந்த 02 ஏக்கர் எந்த எந்த புல எண்ணில் உள்ளது என்று எனக்குத் தெரியவில்லை. வழக்குச் சொத்தில் தென்னைமரங்கள் உள்ளன என்றால் சரிதான். அறுதியாவணம் எழுதியபோது இருந்ததா என்றால் இல்லை. அதன்பிறகுதான் தாத்தாவுடன் சேர்ந்து வைத்தோம். அப்போது வாழைமரங்கள், தேங்காய் மரங்கள் இருந்தன. 2010-ஆண்டிலிருந்தே அங்கு 100 மரங்கள் இருந்தன என்றும் தற்போது 150 மரங்கள் உள்ளன என்றும் சொன்னால் எனக்கு தற்போது நினைவில்லை. அறுதியாவணத்தில் 25 தென்னைமரங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையில் என் தாத்தா அறுதியாவணம் எழுதி இருந்தால் 100 மரத்தையும் காட்டியிருப்பார் என்றால் சரியல்ல.

1995-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் 25 தென்னைமரங்கள் என்று இருந்ததால் அதை அப்படியே அறுதியாவணத்தில் எழுதிக்கொண் -டோம் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் வீடு உள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் கட்டினார். என் தாத்தாதான் கட்டினார் என்றால் சரியல்ல. அந்த வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். வீட்டு வரி, மின் கட்டணம் ஆகியவற்றை பிரதிவாதிகள் செலுத்துகின்றனர் என்றால் சரியல்ல. என் தகப்பனார்தான் செலுத்துகிறார். மின் கட்டண, சொத்து வரி ரசீது எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது தங்கை ஆசிரியராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். அவருக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். என்னுடைய தங்கை வெளிநாடு எதற்கேனும் சென்று வந்தாரா என்றால் கல்லூரி மூலம் சென்றுவந்தார்.

மொத்தம் 03 வழக்கிற்கும் சேர்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். முதலேற்பு வழக்கு எண் 676/2025 வழக்கில் நான் எதிர் -வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தாத்தா சுய நினைவின்றி இருந்த சமயத்தில் அவருக்கு தெரியாமல் ஏமாற்றி அறுதியாவணத்தை எழுதி வாங்கினோம் என்றால் சரியல்ல. அந்த அறுதியாவணம் செல்லாது என்றும் அதில் கண்டுள்ள சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கும் சரிசம பாக உரிமை உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டியது என்றும் முதலேற்பு வழக்கு எண் 676/2025 அனுமதிக்கப்பட வேண்டியது என்றும் சொன்னால் சரியல்ல.

முதலேற்பு வழக்கு எண் 551/2023 வழக்குபடி பாகப்பிரிவினை பெறுவதற்கு பிரதிவாதிகளுக்கு உரிமை உண்டு என்று சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.